# 29

# இலங்கையிலுள்ள ஏனைய சமயங்கள் – 2

## இந்து சமயம்



இந்து சமயம் மிகவும் பழமையான சமயமாகும். இந்து சமயம் என்ற பெயர் அச்சமயத்தைக் குறிப்பதற்குச் சமய நூல்கள் ஒன்றிலும் வழங்கப்படவில்லை. மிகப் பழைய காலத்திலே சிந்து நதிப் பள்ளத்தாக்கில் வாழ்ந்த மக்களைப் பாரசீகர் 'இந்துக்கள்' என்று அழைத்தனர். நாளடைவில் இந்திய மக்களின் சமயம் இந்து சமயம் என வழங்குவதாயிற்று. உண்மையில் இந்து சமயத்திற்குச் சரியான பெயர் 'சனாதனதர்மம்' என்பதாகும். இது எக்காலத்திலும் எவ்விடத்திலும் ஒப்ப நடக்கும் தர்மம் என்று பொருள்படும்.



இந்து சமயத்தில் பல்வேறு பிரிவுகள் இருக்கின்றன. எப்பிரிவினரும்

1. கடவுள் ஒருவர் இருக்கிறார் என்பதையும்

2. இருக்கு, யசுர், சாமம், அதர்வம் என்ற நான்கு வேதங்களே தமது சமயத்திற்கு ஆதார நூல்கள் என்பதையும் ஒத்துக்கொள்கிறார்கள். வேதங்கள் என்பது இருடிகளுக்கும் ஞானிகளுக்கும் கடவுளாற் காலத்துக்குக் காலம் தெரிவிக்கப்பட்ட சமய நூல்களாகும்.

இந்து சமயப் பிரிவுகளுள்ளே தமிழ் மக்களிடையே நின்று நிலவிவரும் முக்கியமான பிரிவுகள் சைவமும் வைணவமும் ஆகும். சைவர்கள் தமது முழுமுதற் கடவுளைச் சிவன் என்பர். வைணவர்கள் தமது முழுமுதற் கடவுள் விஷ்ணு என்கின்றனர். இவ்விரு பிரிவினரும் தமக்கென வேறுவேறான கிரியைகளையும் சடங்குகளையும் அமைத்து வேறுவேறான விழாக்களையும் கொண்டாடுகின்றனர்.

சிவ வழிபாடு புராதன நகரங்களாகிய மொகஞ்சதாரோ, ஹரப்பா என்பவற்றில் நிலவியது என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். இன்றும் இமாலயந் தொட்டு இலங்கை வரை சிவ வழிபாடு ஆங்காங்கே நிலவுகிறது. இலங்கையிற் பண்டுதொட்டுச் சைவ சமயம் நிலவி வருகிறது. சரித்திர காலத்திற்கு முன் ஆட்சி புரிந்த இராவணன் ஒரு சைவனாவான். இன்று இலங்கை வாழ் இந்துக்களிற் பெரும்பான்மையோர் சைவ சமயத்தவராவர்.

சைவ சமயத்தவர்களுக்கு வேதங்களுடன் ஆகமங்கள் என்னும் சமய நூல்களும் இருக்கின்றன. இவை சமய தத்துவங்களையும் கோயில்கள் அமைக்கும் முறையையும் கடவுள் வழிபாட்டின் முறையையும் கூறுகின்றன.

சைவர்களுக்கு முன்னே கூறியவாறு, இறைவன் ஒருவனேயாவான். இறைவனை அவர்கள் சிவபெருமான் என்பர் (சிவன் என்றால் நன்மையைச் செய்பவன் என்று பொருள்படும்). கடவுள் ஒருவரேயாயினும் அவர் பல்வேறு தொழில் புரியும்பொழுது பல்வேறு பெயர்களால் அவரை அழைக்கின்றனர். சைவத் திருக்கோயில்களும் அங்குள்ள விக்கிரகங்கள் முதலானவையும் தத்துவக் கருத்துக்களை விளக்கும் அறிகுறிகளாகும்.

சைவக் கோயில்களிலே தினமும் ஆறு காலங்களிலே வழிபாடு நடப்பது வழக்கம். சைவ மக்கள் தினமும் கோயில் வழிபாடு செய்தல் வேண்டும். அப்படிச் செய்ய முடியாதவர்கள் விசேட தினங்களிலாவது கோயிலுக்குப் போதல் நன்று. விசேட தினங்களில் வெள்ளிக்கிழமையும் ஒன்றாகும்.

சைவ மக்கள் கடவுளைப் பத்தி மார்க்கத்தினாலே வழிபடுகின்றனர். கடவுளிடத்துத் தீவிர அன்புகொண்டு வழிபடுதலே பத்தி மார்க்கமாகும். இப்படி வழிபடும்போது ஒவ்வொருவரும் தத்தமக்கு ஏற்றமாதிரியான தொடர்பைக் கடவுளுடன் கொள்கிறார்கள். வேறு சிலர் கடவுளை எசமான் எனக்கொண்டு வணங்குகிறார்கள். வேறு சிலர் அவரைத் தந்தையென வந்திக்கின்றனர். இன்னும் சிலர் அவருடன் நட்புரிமை பூண்டு ஒழுகுகின்றனர். எவ்வாறு இறைவனை வழிபடினும் இறுதியில் யாவரும் சென்றடையும் பரம்பொருள் ஒருவரே.

சைவ மக்கள் பல நோன்புகள் நோற்கின்றனர். நோன்பு நாட்களிலே மனதை ஒருவழிப்படுத்தி கடவுளைத் தியானிக்கின்றனர். தீவிரமாக நோன்பைக் கடைப்பிடிப்பவர்கள் பகலும் இரவும் உணவு உட்கொள்ளாதிருந்து அடுத்த நாளே உணவு உட்கொள்வார்கள்.

சைவ மக்கள் உட்பட இந்துக்களின் அன்றாட வாழ்க்கையையும் சமூக வாழ்க்கையையும் கட்டுப்படுத்துவன சிமிருதி என்னும் தர்ம சாத்திரங்களாகும். இவை சமய வாழ்வு வாழ்ந்த ஞானிகளாலே வகுக்கப்பட்டமையினால் இவற்றை இந்துக்கள் தவறாது கடைப்பிடிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறார்கள். ஆயினும் இவை சமயத் தத்துவங்களைப்போல் என்றும் எவ்விடத்தும் உடன்பாடானவை அல்ல. காலப்போக்கிற்கும் சுற்றாடலுக்கும் தக்க மாற்றப்படலாம்.

இனித் தமிழ்ச் சைவ மக்களின் சமூகத்திலும் காலத்துக்குக் காலம் ஞானிகள் தோற்றித் தமது வாழ்க்கை மூலம் சமயத்தையும் சமயப் பற்றையும் மக்களிடையே வளர்த்திருக்கிறார்கள். இவர்களுள் அப்பா, சம்பந்தர், சுந்தரர், மாணிக்கவாசகர் என்ற நான்கு சமயப் பெரியார்களை மக்கள் தம் சமயக் குரவர்களாகக் கொண்டு அவர்கள் காட்டிய வழியைக் கடைப்பித்தொழுக முயலுகின்றனர்.

## இ. கிறிஸ்தவம்

இயேசுகிறிஸ்துவைப் பின்பற்றுவோர் கிறிஸ்தவர்கள் எனப்படுகின்றனர். கிறிஸ்தவர்களின் புனித நூல் திருவிவிலியம் ஆகும். இறை மகன் இயேசு மனுவுரு எடுத்து இப்பாவ உலகிற்கு வந்ததாகவும், கன்னிகையான மரியாளிடம் தூய ஆவியால் உற்பவித்ததாகவும் கூறப்படுகின்றது.



பின்பு பாடுபட்டு முழு உலக மீட்புக்காகவும் மரித்து மூன்றாம் நாள் உயிர்த்தெழுந்ததாகவும் கிறிஸ்தவர்கள் நம்புகின்றனர். இதனை கிறிஸ்தவர்கள் ஆழமாக விசுவாசிக்கின்றனர்.

இயேசு பிரான் பெத்லேகம் என்னும் சிற்றூரில் மாட்டுத் தொழுவத்தில் யூத குலத்தில் பிறந்தார். கன்னியான மரியாள் இவரது தாயாவார். மரியாளுக்கு மண ஒப்பந்தமான தச்சனான சூசை என்பவரே இயேசுவின் பிறப்பிலிருந்தே அவருக்கு வளர்ப்புத் தந்தையானார்.

நசரேத் என்னும் ஊரில் இவர் தமது இளமையைக் கழித்ததாலேயே இவரை நசரேயனாகிய இயேசு என அழைக்கின்றனர். முப்பது ஆண்டுகளின் பின்னர் இயேசு தனது பணியை ஆரம்பித்தார். இயேசுவின் வழியை ஆயத்தம் செய்த திருமுழுக்கு யோவான் என்னும் இறைவாக்கினர், உலகம் எதிர்பார்த்திருந்த மீட்பர் வந்துவிட்டார் என மக்களுக்கு அறிவித்தார்.

இயேசுவின் வார்த்தையும் செயலும் நிறைந்த திருப்பணியானது இறைவனிலே நம்பிக்கை கொண்டு அயலவனை அன்பு செய்து மன்னித்து வாழ வேண்டுமென்று தெளிவாகக் காண்பித்தது. அவர் ஏழைகள், துயரப்படுவோர், சோர்வுற்றோருக்கு உதவி செய்தார். மற்றவர்களால் ஒதுக்கப்பட்டவர்களுக்குச் சார்பாக செயற்பட்டார். பாவிகளுக்கு ஆழ்ந்த அனுதாபம் காட்டினார். வியாதிகளைக் குணமாக்கினார். குருடர்களுக்குப் பார்வை அளித்தார். ஊமையரைப் பேசச் செய்தார். மரித்தோருக்கு உயிர் கொடுத்தார். கடலில் எழுந்த புயலை அமர்த்தினார். அவர் இறைவனோடு கொண்டிருந்த ஒன்றிப்பு வியப்புக்குரிய வாழ்வுக்கு ஊற்றாக அமைந்தது எனலாம்.

தமக்கு உதவி செய்ய இயேசு பன்னிருவரைத் தேர்ந்தெடுத்துக் கொண்டார்.

''நான் உங்கள் மேல் அன்பு கூர்ந்தததைப் போல் நீங்களும் ஒருவர் மற்றவர் மீது அன்பு வையுங்கள்.'' என்று அவர்களுக்குக் கூறினார்.

அவர் ஊரெல்லாம் சென்று தம்மைப் பின்பற்றிய பெருந்திரளான மக்களுக்கு சிறிய கதைகளாலும் உவமைகளாலும் தமது நற்செய்தியை எத்திவைத்தார்.

''உன் கடவுளாகிய ஆண்டவரை முழு உள்ளத்தோடும் அன்பு செய். உன்மீது அன்பு காட்டுவது போல் உன் அயலான் மீதும் அன்பு காட்டு.'' என இயேசு கூறினார்.

அவருடைய போதனை எல்லோருக்கும் எளியதாக அமைந்தது. தன்னலம் தேடும் மனப்பான்மையை மாற்றிப் புது வாழ்வுக்காகத் தாழ்ச்சியையும் அன்புள்ளங்களையும் கொண்டிருங்கள். என்னைப் பின் செல்பவனுக்கு எல்லாம் ஆகும் என்று குறிப்பாக தமக்குச் செவி சாய்க்க மறுத்த ஆணவக்காரருக்கும் வெளிவேடர்களுக்கும் எடுத்துரைத்தார்.

உண்மையாக அவரை விரும்பாதவர்களும் இருந்தனர். சில குருக்களும் அதிகாரிகளும் அவரை விரும்பவில்லை. எனவே அவருக்கெதிராகக் குற்றச் சாட்டுக்களைக் கொண்டு வந்து அவருக்கு தண்டனை வழங்குவதற்கு உரோமையை ஆண்ட போஞ்சியோ பிலாத்துவிடம் அவரைக் கையளித்தனர். அவருக்கு மரண தண்டனை தீர்ப்பளிக்கப்பட்டது.

இயேசு சாட்டைகளால் அடிக்கப்பட்டு, ஏளனம் செய்யப்பட்டு, முள்முடி தரிக்கப்பட்டுச் சிலுவை சுமந்தவராய் ஜெருசலமுக்கு வெளியே உள்ள கொல்கொத்தா என்னும் குன்றில் சிலுவையில் அறையப்பட்டார். உரோமர்களின் தண்டனை முறைகளில் இதுவும் ஒன்றாக நிலவியது.

இயேசு வெள்ளிக்கிழமை அன்று உயிர்விட்டபடியால் கிறிஸ்தவர்கள் ஆண்டு தோறும் அச்சம்பவத்தை நினைவுகூர்ந்து வழிபாடு செய்வர். அத்தினத்தை பெரிய வெள்ளி என்று அழைப்பர். அவ்வாறே அவர் ஞாயிற்றுக் கிழமையன்று காலையில் மீண்டும் மரணத்திலிருந்து உயர்த்தெழுந்தார். இதனை உயிர்த்த ஞாயிறு என கிறிஸ்தவர்கள் கொண்டாடுவர். அன்றியும் ஒவ்வொரு ஞாயிறும் அவர்களுக்கு விசேட தினமாகும். அன்றைய தினம் ஆலயம் சென்று வழிபாடுகளில் பங்கேற்பர்.

இயேசு இப்பூவுலகில் பிறந்த தினத்தை நத்தார் தினமாக கிறிஸ்தவர்கள் கொண்டாடுவர்.

கிறிஸ்தவர்களில் பல பிரிவினர் உள்ளனர். கத்தோலிக்கர் என்போர் அவர்களில் பிரதான பிரிவினராவர்.

**பயிற்சி**

1. இந்து சமயத்தின் இயற்பெயர் யாது? அதன் பொருள் என்ன?
2. இந்து சமய ஆதார நூல்களான நான்கு வேதங்களும் எவை?
3. பெரிய வெள்ளி கிறிஸ்தவர்களிடம் எவ்வகையில் முக்கியத்துவம் பெறுகிறது??
4. கிறிஸ்தவர்கள் கொண்டாடும் முக்கிய பெருநாள் யாது? அது ஏன் கொண்டாடப்படுகிறது?
5. இயேசுநாதரின் தாயார் யார்?